பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 21

முன்னுரை 25

முதல் உரை 27

1 குழைந்து பேசாதீர்கள் 37

2 பெண்களைப் போன்று நடக்காதீர்கள் 38

3 நன்றிகெட்டவர்களாக இருக்காதீர்கள் 39

4 தொழுகையில் கை தட்டாதீர்கள் 41

5 தாடியைச் சிரைக்காதீர்கள் 46

6 ஆபரணங்கள் மற்றும் பட்டாடைகளை அணியாதீர்கள் 49

7 மருதாணி இட்டுக்கொள்ளாதீர்கள் 51

8 இஹ்றாமிலிருந்து விடுபடும்போது ஆண்கள் தலையைச் சிரைப்பதே சிறந்தது 52

9 இத்தா மற்றும் துக்கம் அனுசரித்தல் 53

10 இத்தாவுக்கும் துக்கம் அனுசரித்தலுக்கும் இடையே வேறுபாடு 56

இரண்டாவது உரை 59

11 பேச்சில் குழையாதீர்கள் 62

12 மணம் தெரிய நறுமணமிடுங்கள் 63

13 தொழுகை வரிசையில் ஆண் தனியாகத் தொழுவது 64

14 பெண்களைப்போல் ஆண்களும் நடுவில் நிற்பது 69

15 வீட்டில் தொழுவது 71

16 இஹ்ராமுடைய நிலையில் தைக்கப்பட்ட ஆடையை அணிவது 75

17 தவாஃப் செய்யும்போது பெண்களைப்போன்று மெதுவாக நடப்பது 77
18 மருத்துவத்திற்காக அல்லாமல் மருதாணியிடுதல் 78
19 தஃப் அடிப்பது 81
20 குங்குமப்பூ சாயமிட்டுக்கொள்வது 84

1

குழைந்து பேசாதீர்கள்

❀

பெண்ணைப் போன்று குழைவது, கோணுவது இல்லாமல் ஓர் ஆண் இருக்க வேண்டும். இமாம் புகாரீ ﵀ அவர்களும் இமாம் முஸ்லிம் ﵀ அவர்களும் தங்களுடைய ஆதாரப்பூர்வமான நபிமொழி நூல்களில் அபூ ஹுறைறா ﵁ அவர்கள் மூலமாக பதிவு செய்துள்ளார்கள். அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்:

اسْتَوْصُوا بِالنِّسَاءِ، فَإِنَّ المَرْأَةَ خُلِقَتْ مِنْ ضِلَعٍ، وَإِنَّ أَعْوَجَ شَيْءٍ فِي الضِّلَعِ أَعْلاَهُ، فَإِنْ ذَهَبْتَ تُقِيمُهُ كَسَرْتَهُ، وَإِنْ تَرَكْتَهُ لَمْ يَزَلْ أَعْوَجَ، فَاسْتَوْصُوا بِالنِّسَاءِ

பெண்கள் விசயத்தில் (நல்ல விதமாக நடந்துகொள்ளும்படிக் கூறுகின்ற) என் அறிவுரையை ஏற்றுக்கொள்ளுங்கள். அவர்களை நல்லவிதமாக நடத்துங்கள். ஏனெனில், விலா எலும்பிலிருந்து பெண் படைக்கப்பட்டிருக்கிறாள். விலா எலும்பிலேயே அதன் மேற்பகுதிதான் மிகக் கோணலாக இருக்கும். நீ அதை (பலவந்தமாக) நேராக்க முயன்றால் உடைத்துவிடுவாய். அதை அப்படியே விட்டுவிட்டால் கோணலாகவே இருக்கும். ஆகவே, பெண்கள் விசயத்தில் என் அறிவுரையை ஏற்றுக்கொள்ளுங்கள். (அறிவிப்பு: அபூ ஹுறைறா ﵁, புகாரீ 3331)

கோணல், குழைவு, நெளிவு பெண்களின் இயற்கை என்று இந்தச் செய்தி நமக்கு அறிவிக்கிறது. பெண்ணைவிட ஆண் குணத்தாலும் படைப்பாலும் சிறந்தவன். எனவே, பேசுவதில் பெண்களைப் போன்று நடக்கக் கூடாது.

5

தாடியைச் சிரைக்காதீர்கள்

❀

தாடியைச் சிரைப்பது இறைமறுப்பாளர்களின் செயல்களுக்கு ஒப்பானது மட்டுமில்லாமல் பெண்களுக்கும் ஒப்பானது என்று அறிஞர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். அல்லாஹ் சொல்கிறான்:

أَوَمَنْ يُنَشَّأُ فِي الْحِلْيَةِ وَهُوَ فِي الْخِصَامِ غَيْرُ مُبِينٍ

என்னே! தன் விவகாரத்தைத் தெளிவாக எடுத்துக் கூற சக்தியற்று ஆபரணத்திலும், (சிங்காரிப்பிலும்) வளர்க்கப்பட்டு வரும் (அவர்கள் இழிவாகக் கருதும் பெண்களையா அவனுக்குச் சந்ததி என்று கூறுகின்றார்கள்?) (குர்ஆன் 43:18)

அலங்காரம் செய்வது கணவனுக்குத் தன்னை அழகுபடுத்திக் காட்டுவதற்காக மட்டுமே. அவளுக்கு தாடி வளர்ந்தால் அதை அவள் நீக்கிக்கொள்ளலாம். பெண்கள் தாடியை மழிப்பது அல்லாஹ்வின் படைப்பினத்தை மாற்றுவதாக ஆகாது. காரணம், பெண் என்பவள் தாடி இல்லாமல்தான் படைக்கப்படுகிறாள்.

இமாம் இப்னு பாஸ் ﵀ அவர்கள் இது தொடர்பாகத் தனி புத்தகம் ஒன்றை எழுதியுள்ளார்கள். ஆண்கள் தாடியை மழிப்பது பெண்களுக்கு ஒப்பானது என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.[4]

---

4 இமாம் இப்னுல் கய்யிம் ﵀ அவர்கள் அத்திப்யான் என்ற நூலின் பக்கம் 95இல் குறிப்பிடுகிறார்கள்: 'தாடி முடியினால் சில நன்மைகளும் இருக்கின்றன. அலங்காரமும் தாடி உள்ளவர்களுக்கு அமைகின்ற கம்பீரமான தோற்றமும் அவற்றில் உள்ளவையே. மேலும், அது ஆண்களையும் பெண்களையும் வேறுபடுத்திக் காட்டுகிறது. இன்பம் பெறக்கூடிய இடமாகவும் முத்தம் பெறக்கூடியவர்களாகவும் பெண்கள் இருக்கிறார்கள். எனவே, அவர்கள் தாடி முடியிலிருந்து நீங்கியிருப்பதுதான் மிக அழகானதும் மிக ஏற்றமானதுமாகும். இன்பம் பெறக்கூடிய இடங்கள் தாடி முடியிலிருந்து நீங்கியிருப்பதுதான் மிகவும் பூரணமானதாகும்.'

7

மருதாணி இட்டுக்கொள்ளாதீர்கள்

❀

பெண்கள் மருதாணி பூசிக்கொள்ளலாம் என்று பல செய்திகள் வந்துள்ளன. ஆனால், மருதாணி ஆண்களுக்குத் தடையாகும்.

عَنْ جَدَّتِهِ سَلْمَى خَادِمِ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَتْ مَا سَمِعْتُ أَحَدًا قَطُّ يَشْكُو إِلَى رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ وَجَعًا فِي رَأْسِهِ إِلَّا قَالَ احْتَجِمْ وَلَا وَجَعًا فِي رِجْلَيْهِ إِلَّا قَالَ اخْضِبْهُمَا بِالْحِنَّاءِ

நபி ﷺ அவர்களிடம் ஒருவர் வந்து, 'அல்லாஹ்வின் தூதரே, எனக்குத் தலையிலும் கால்களிலும் வலியுள்ளது' என்று முறையிட்டார். அவருக்கு நபி ﷺ அவர்கள் மருதாணியைப் பயன்படுத்துமாறு ஏவினார்கள். (அறிவிப்பு: ஸல்மா ؓ, அஹ்மது 27617 ஷுஐபு அல்அர்னாவூத்: ளயீஃப்)

பெண்கள் போன்று ஆண்கள் மருதாணியைப் பயன்படுத்தக் கூடாது என்றும், மருதாணியை ஆண்கள் சிகிச்சைக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

12

மணம் தெரிய நறுமணமிடுங்கள்

❀

طِيبُ الرِّجَالِ مَا ظَهَرَ رِيحُهُ وَخَفِيَ لَوْنُهُ، وَطِيبُ النِّسَاءِ مَا ظَهَرَ لَوْنُهُ وَخَفِيَ رِيحُهُ

ஆண்களுக்குச் சிறந்த நறுமணம், மணம் வெளியே தெரியக் கூடியதும், நிறம் மறைவானதாக இருக்கக்கூடியதுமாகும். பெண்களின் நறுமணத்தில் சிறந்தது, வாடை குறைந்ததும் நிறம் வெளிப்படையாக இருக்கக்கூடியதாகும். (அறிவிப்பு: அபூ ஹுறைறா ﷺ, திர்மிதீ 2787)

14

பெண்களைப்போல் ஆண்களும் நடுவில் நிற்பது

❀

இமாம் ஹாகிம் ﵀ அவர்கள் முஸ்தத்ரக் அலஸ் ஸஹீஹைனி பாகம் 1 பக்கம் 203யிலும் பைஹகி குப்ராவில் பாகம் 3 பக்கம் 131யிலும் பைஹகீ அவர்கள் தம்முடைய மஃரிபா பாகம் 4 பக்கம் 5975 யிலும் ஆயிஷா ﵂ அவர்கள் மூலம் ஒரு செய்தியைப் பதிவு செய்துள்ளார்கள்.

عَنْ عَطَاءٍ قَالَ: كَانَتْ عَائِشَةُ - رضي الله عنها - تُؤَذِّنُ وَتُقِيمُ, وَتَؤُمُّ النِّسَاءَ وَتَقُومُ وَسَطَهُنَّ

ஆயிஷா ﵂ அவர்கள் பெண்களுக்காகப் பாங்கு சொல்லி இகாமத்தும் சொல்லி அவர்களுக்குத் தொழுகையும் நடத்துவார்கள் அப்போது அவர்களின் நடுவில் ஆயிஷா ﵂ அவர்கள் நின்று கொள்வார்கள். (அறிவிப்பு: அதாஉ ﵀, ஹாகிம் 731)

இந்தச் செய்தியின் அறிவிப்பாளர் தொடரில் இடம்பெறும் லைஸ் என்ற அறிவிப்பாளர் பலவீனமானவர். என்றாலும் இதை உறுதிப் படுத்த வேறு ஒரு செய்தி முஸன்னஃப் பாகம் 1 பக்கம் 536இல் இடம்பெற்றுள்ளது. அதில் ஆயிஷா ﵂ அவர்கள் பெண்களுக்காகத் தொழுகை நடத்துவார்கள். அவர்களின் நடுவில் நின்று கொள் வார்கள்.

இந்தச் செய்தியிலும் இப்னு அபீலைலா என்பவர் இடம் பெற் றுள்ளார். இதே செய்தி முஸன்னஃப் இப்னு அப்துர் ரஸ்ஸாக் பாகம் 3 பக்கம் 141யில் இடம்பெற்றுள்ளது. இந்தச் செய்தியின் அறிவிப்பாளர் தொடரில் இடம்பெறும் ஈதா மற்றும் மைஸரா இப்னு குபைப் என்பவரைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை. எனவே, இவ்விருவரும் யாரென அறியப்படாதவர்கள் என்பதால் இந்தச் செய்தியும் பலவீனமானதே.

15

வீட்டில் தொழுவது

❀

أَتَى النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ رَجُلٌ أَعْمَى، فَقَالَ: يَا رَسُولَ اللهِ، إِنَّهُ لَيْسَ لِي قَائِدٌ يَقُودُنِي إِلَى الْمَسْجِدِ، فَسَأَلَ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَنْ يُرَخِّصَ لَهُ، فَيُصَلِّيَ فِي بَيْتِهِ، فَرَخَّصَ لَهُ، فَلَمَّا وَلَّى، دَعَاهُ، فَقَالَ: 'هَلْ تَسْمَعُ النِّدَاءَ بِالصَّلَاةِ؟ قَالَ: نَعَمْ، قَالَ: 'فَأَجِبْ

நபி ﷺ அவர்களிடம் கண் தெரியாத தோழர் ஒருவர் வந்து, 'அல்லாஹ்வின் தூதரே, என்னைத் தொழுகைக்கு அழைத்து வருவதற்கு யாருமில்லை. ஆகையால், நான் வீட்டில் தொழுது கொள்ளலாமா?' என்று அனுமதி கேட்டார். நபி ﷺ அவர்களும் அனுமதி கொடுத்தார்கள். அவர் திரும்பச் சென்றபோது அவரை அழைத்து, 'நீங்கள் பாங்குச் சப்தத்தைக் கேட்கிறீர்களா?' என்று கேட்டார்கள். அதற்கு அவர், 'ஆம்' என்றார். 'அப்படியானால் நீங்கள் தொழுகைக்கு வந்துவிடுங்கள்' என்று பதிலளித்தார்கள். *(அறிவிப்பு: அபூ ஹுறைறா ؓ, முஸ்லிம் 653)*

عَنِ ابْنِ أُمِّ مَكْتُومٍ أَنَّهُ سَأَلَ النَّبِيَّ -صلى الله عليه وسلم- فَقَالَ يَا رَسُولَ اللَّهِ إِنِّي رَجُلٌ ضَرِيرُ الْبَصَرِ شَاسِعُ الدَّارِ وَلِي قَائِدٌ لاَ يُلاَئِمُنِي فَهَلْ لِي رُخْصَةٌ أَنْ أُصَلِّيَ فِي بَيْتِي قَالَ هَلْ تَسْمَعُ النِّدَاءَ . قَالَ نَعَمْ. قَالَ لاَ أَجِدُ لَكَ رُخْصَةً

உம்மி மக்தூம் என்ற நபித்தோழர் நபி ﷺ அவர்களிடம் வந்து, 'அல்லாஹ்வின் தூதரே, நான் பார்வையற்றவனாகவும் என்னுடைய வீடும் தூரமானதாக இருக்கிறது. என்னை அழைத்து வருபவர் யாருமில்லை. என்னுடைய வீட்டில் தொழுவதற்கு எனக்கு அனுமதியுள்ளதா?' என்று கேட்டார். 'நீங்கள் பாங்குச் சப்தத்தைக் கேட்கிறீர்களா?' என்று நபியவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர் 'ஆம்' என்றார். 'அப்படியானால் உங்களுக்கு எந்த அனுமதியையும் நான் பெற்றுக்கொள்ளவில்லை' என்றார்கள். *(அறிவிப்பு: அப்துல்லாஹ் இப்னு உம்மி மக்தூம் ؓ, அபூ தாவூது 552, ஸஹீஹ் அபூ தாவூது 561)*